# திறன்வளர் ஆசிரியர் மன்றம்
# மற்றும்
# வெற்றிக்கு வழி குழுமம்

## இணைந்து நடத்தும்
### "வெற்றிக்கு வழி அமைப்போம் விழா" நிகழ்வுகள்

## மாணவ, மாணவியருக்கான பொதுவான அறிவுரைகள்
## (General Instructions for Students)

வெற்றிக்கு வழி அமைப்போம் விழாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்!!!

1. பள்ளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் தனித்தனியே அழைப்பிதழ்கள், விழாவிற்கு தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதம் ஆகியவை பள்ளிக்கு அனுப்பி வைக்கப்படும். தனித்தேர்வர்களுக்கு அவர்கள் கொடுத்த வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். (கண்டிப்பாக விழாவிற்கு அழைப்பிதழ், தேர்வு செய்யப்பட்ட கடிதம் ஆகியவற்றை எடுத்துவர வேண்டும். அவ்வாறு எடுத்து வராதவர்களை கண்டிப்பாக அனுமதிக்க இயலாது.)
2. விழாவிற்கான அழைப்புக் கடிதம், தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதம் ஆகியவை தங்களுக்கு வரவில்லை எனில் கீழே கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண்களுக்கோ அல்லது ஈமெயில் முகவரிக்கோ 30.01.2019 க்குள் தெரியப்படுத்தவும்.

   தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட "தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதத்தில்" பெயர், **Registration number** (மாதிரி பொதுத்தேர்வு எழுதிய போது எங்களால் வழங்கப்பட்டது), பள்ளி முகவரி ஆகியவற்றில் ஏதேனும் **Correction** இருந்தால் கீழே கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண்களுக்கோ அல்லது ஈமெயில் முகவரிக்கோ 30.01.2019 க்குள் தெரியப்படுத்தவும்.

   | | | |
   |---|---|---|
   | அலைபேசி எண்கள் | : | 7397774510, 9787201010 |
   | ஈமெயில் | : | **way2s100@gmail.com**. |

   விழா நடைபெறும் அன்று மேற்கண்டவற்றில் எந்த மாற்றமும் செய்ய இயலாது.
3. 03.02.2019 (ஞாயிறு) காலை 8.00 முதல் 8.40 வரை மட்டுமே விழாவிற்கு வந்தவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படும்.
4. முதல் பரிசு, சிறப்பு பரிசு பெறுபவர்கள் 8.40க்கு முன்னர் விழா அரங்கில் இருக்க வேண்டும். 8.45 முதல் 9.30க்குள் அவர்களுக்கு மேடையில் அந்த பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசு, சிறப்பு பரிசு பெறுபவர்கள் 9.30க்கு பின் அரங்கிற்கு வந்தால் மேடையில் அவர்களுக்கு பரிசு வழங்க இயலாது.
5. மாணவர்களுக்கு காலை தேநீர், **snacks**, மதிய உணவு, மாலை தேநீர், **snacks** வழங்கப்படும். பிளாஸ்டிக் உபயோகம் தடைசெய்யப்பட்டுள்ள காரணத்தால் மாணவ, மாணவியர்கள் தங்கள் வசம், **Empty watter bottle** கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது)
6. உங்கள் பள்ளியில் உங்களுக்கு வழங்கப்பட்ட **ID CARD** ஐ உங்கள் வசம் வைத்திருங்கள்.
7. **Way to Success Publications** புத்தகங்களுக்கான விற்பனை அங்காடி **(Sales stall)** காலை 8.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை செயல்படும். மாணவர்கள் தங்களுக்கு தேவைப்படும் புத்தகங்களை சிறப்பு தள்ளுபடி விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
8. விழாவின் மாலை அன்று வழங்கப்படும் ரொக்கப் பரிசுகள் அனைத்தும் விழாவின் அன்று காலை நடைபெறும் 50 மதிப்பெண்களுக்கான சிறப்புத் தேர்வு அடிப்படையிலேயே வழங்கப்படும்.

   சிறப்பு தேர்வு வினாத்தாள் வடிவமைப்பு **(Blue Print)**
   மொத்த வினாக்கள்: 50 (கொள்குறி வகை – **Objective Type**)
   மொத்த மதிப்பெண்கள்: 50

   | | |
   |---|---|
   | தமிழ் | - 12 வினாக்கள் |
   | ஆங்கிலம் **(English)** | - 12 வினாக்கள் |
   | கணிதம் **(Maths)** | - 8 வினாக்கள் |
   | அறிவியல் **(Science)** | - 8 வினாக்கள் |
   | சமூக அறிவியல் **(Social Science)** | - 8 வினாக்கள் |
   | மனத்திறன் தேர்வு **(Mental Ability Test)** | - 2 வினாக்கள் |